ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி திருப்பத்தூர்

முதன்மைக் கல்வி அலுவலர் அவர்களின் செயல்முறைகள்

ந.க.எண். 102/ஒபக/2022 நாள் : 24.08.2022

பொருள் : ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி- உயர்கல்வி, ஆலோசனைகள் மற்றும் வழிக்காட்டுதல் (**Career Guidance**) **2021-22**ஆம் ஆண்டில் 12ஆம் வகுப்பு முடித்த மாணவர்களுக்கான கூட்டம்- அரசு மேல்நிலைப்பள்ளிகளில் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் தெரிவித்தல் -சார்ந்து.

பார்வை : மாநில திட்ட இயக்குநர், ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி அவர்களின் செயல்முறைகள் ந.க.எண். ACE/118/ஆ3/CG-3/ஒபக/2022 நாள்: 23.08.2022

------------------------

பார்வையில் காணும் அரசாணையில் "அரசு பள்ளியில் பயிலும் மாணவர்களுக்கு உயர்கல்வி மற்றும் வேலை வாய்ப்புகள் குறித்த ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டுதல்கள் அளிப்பதற்கு ஏதுவாக ஒவ்வொரு பள்ளியிலும் வழிகாட்டும் ஆலோசனை மையம் உருவாக்கப்படும். இதற்கென தனியே கலைத்திட்டம் மற்றும் பாடத்திட்டம் உருவாக்கப்பட்டு, 9 முதல் 12ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு முறையாக கொண்டு சேர்ப்பதற்கு ஏதுவாக தொடர் வகுப்புகள் நடத்தப்படும். முன்னாள் மாணவர்களைக் கொண்டு அரசுப்பள்ளியில் பயிலும் மாணவர்களுக்கு தொடர் நெறிப்படுத்தும் **(Continuous Mentoring)** முறையும் அறிமுகப்படுத்தப்படும் எனக் கூறப்பட்டுள்ளது.

இதனை நிறைவேற்றும் பொருட்டு பள்ளிக் கல்வி ஆணையரகம், ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, மற்றும் மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி & பயிற்சி நிறுவனமும் இணைந்து பணியாற்றி உரிய நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகின்றனர்.

<u>2021-22-**இல் 12ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கான கூட்டம்**</u>

இதன் தொடர்ச்சியாக, 2021-22ஆம் கல்வி ஆண்டில் 12ஆம் வகுப்பு முடித்த மாணவர்கள், அனைவரும் இவ்வாண்டு 2022-23-இல் உயர்கல்வி தொடர்ந்துள்ளனரா என்பதனை அறிந்திடவும், அவ்வாறு உயர்கல்வி தொடரா மாணவர்கள் இருப்பின் அதற்கான காரணத்தை கண்டறிந்து, அதனை களைந்து, <u>அவர்கள் உயர்கல்வி தொடர்ந்திட தேவையான வழிகாட்டுதல்கள் வழங்கவும்,</u> வருகிற **26.08.22** அனைத்து அரசு மேல்நிலைப் பள்ளிகளில் சார்ந்த பள்ளி தலைமையாசிரியர்களால் பின்வரும் வழிமுறைகளை பின்பற்றி கூட்டம் நடத்தப்படுதல் வேண்டும்.

## வழிகாட்டு நெறிமுறைகள்

- 2021-22ஆம் ஆண்டு 12ஆம் வகுப்பு முடித்த அனைத்து மாணவர்களையும் **26.08.2022** அன்று காலை 10 மணிக்கு அவர்தம் பெற்றோருடன் பள்ளிக்கு வர செய்தல் வேண்டும்.
- உயர்கல்வி, வேலைவாய்ப்பு வழிகாட்டி பயிற்சியானது. அனைத்து அரசு மேல்நிலைப்பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இவ்வாசிரியர்கள் மூலம் இக்கூட்டத்தில் கலந்துக் கொள்ளும் மாணவர்களுக்கு தக்க ஆலோசனைகள் மற்றும் உரிய வழிகாட்டுதல்கள் வழங்கப்பட வேண்டும். தலைமை ஆசிரியர்கள் மாணாக்கர்களின் எண்ணிக்கைக்கிணங்க இப்பயிற்சி பெற்ற ஆசிரியர்களுக்கு உதவியாக ஒன்றிரண்டு ஆசிரியர்களை கூடுதலாக ஒதுக்கீடு செய்து தர வேண்டும்.
- இக்கூட்டத்தில் உயர்கல்வி சேர்ந்துள்ள மாணவர்கள் தேர்ந்தெடுத்த உயர்கல்வி பிரிவு என்ன என்பது பற்றிய தகவல்களை **https://bitly/naanmudhalvan** இணைப்பில் நிரப்ப வேண்டும்.
- <u>உயர்கல்வி தொடராத மாணவர்களிடம், என்ன காரணத்தினால் தொடர இயலவில்லை</u> என்பதனையும் **https://bit.ly/naanmudhalvan** என்னும் இணைப்பில் குறிப்பிட செய்தல் வேண்டும் அவர்கள் தொடர்ந்து பயில தக்க ஆலோசனைகள் மேற்காண் பயிற்சி பெற்ற ஆசிரியர்களால் வழங்கப்பட வேண்டும்.
- பெறப்பட்ட விவரங்களை தொகுத்து அன்றைய பள்ளி **SMC** கூட்டத்தில் அறிக்கையாக முன்வைக்க வேண்டும்.
- மாணவர்களிடம் கேட்கப்பட வேண்டிய வினாக்கள் மற்றும் அவ்வினாக்களுக்கு தரப்பட வேண்டிய விவரங்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. இதனை பின்பற்றி மாணவர்களுடன் கலந்தாலோசனை மேற்கொள்ளப்பட வேண்டும்.
- மேற்காண் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் உயர்கல்வி, வழிகாட்டி புத்தகத்தில் மற்றும் இணையதளத்தில் தரப்பட்டுள்ள கல்வி உதவி தொகை அரசு திட்டங்கள் உள்ளிட்ட விவரங்களை முன் கூட்டியே தயார் செய்து மாணவர்கள் பயன் பெறும் வகையில் வழங்க வேண்டும்.
- மாணவர்கள் பெற்றோர்களுடன் இக்கூட்டத்தில் கலந்து கொள்ள ஏதுவாக பள்ளிக் கல்வித் துறையிலிருந்து <u>Voice message அனைத்து பெற்றோர்களுக்கும் அனைத்து பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கும்</u> அனுப்பப்படும்.

**கண்காணித்தல் மற்றும் ஆலோசனை வழங்குதல்**

**<u>(அ) ஒன்றிய அளவில்</u>**

- அனைத்து ஒன்றியங்களிலும் பணியாற்றும் ஆசிரியர் பயிற்றுநர்கள் தங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள அரசு மேல்நிலைப் பள்ளிகளை கூட்ட நாளில் பார்வையிட்டு, அக்கூட்டத்திற்கு சார்ந்த மாணவர்கள் கலந்துக்கொண்டு, உயர்கல்வி பெற தக்க ஆலோசனை பெற்று பயனடந்தனரா என்பதனை உறுதி செய்தல் வேண்டும்.

...2

- ❖ தலைமை ஆசிரியர்கள் தங்கள் பள்ளிகளில் உயர்கல்விக்கு விண்ணப்பித்துள்ள மாணவர்களின் பெயர் பட்டியல் மற்றும் உள்ளிட்ட விவரங்களை விண்ணப்பித்துள்ள படிப்பு **https://bitly/naanmudhalvan** என்னும் இணைப்பில் பதிவேற்றம் செய்திட ஏதுவாக பெறப்பட்டுள்ளதா என்பதனை உறுதி செய்தல் வேண்டும்.

எனவே, மாவட்ட கல்வி அலுவலர்கள், அனைத்து ஒன்றிய வட்டாரக் கல்வி அலுவலர்கள், அனைத்து ஒன்றிய வட்டார வளமைய மேற்பார்வையாளாகள்(பொ), அனைத்து ஆசிரியர் பயிற்றுநர்கள் சார்ந்த அனைத்து அரசு மேல்நிலைப்பள்ளிகளுக்கும் உடனடியாக இச்செயல்முறைகளை அனுப்பி, மேற்காண் வழிகாட்டுதல்களை பின்பற்றி மாணவர்கள் மற்றும் பெற்றோருக்கான கூட்டம் நடத்திட உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள அறிவுறுத்தப்படுகிறார்கள்.

மேலும், அனைத்து ஆசிரியர் பயிற்றுநர்கள் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட மேல்நிலைப்பள்ளிகளுக்கு ஒரு நாள் முன்னதாகவே சென்று கூட்டத்திற்கான முன்னேற்பாடுகள் அனைத்தும் தலைமையாசிரியர் மேற்கொள்வதை உறுதி செய்திடுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

**இணைப்பு:**

1. மாணவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய ஆலோசனைகள் விவரம்.
2. மாணவர்களிடம் எதிர்பார்க்கப்படும் வினாக்கள்.

ஒம்./-
**முதன்மைக்கல்வி அலுவலர்,**
**திருப்பத்தூர் மாவட்டம்.**

பெறுநர்: 1. முதல்வர் அவர்கள், மாவட்ட கல்வி மற்றும் ஆசிரியர் பயிற்சி நிறுவனம், இராணிப்பேட்டை.
2. மாவட்ட கல்வி அலுவலர்கள், திருப்பத்தூர்/வாணியம்பாடி.
3. அனைத்து வட்டார கல்வி அலுவலர்கள், திருப்பத்தூர் மாவட்டம்.
4. அனைத்து மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள்.
5. வட்டார வளமைய மேற்பார்வையாளர்கள்(பொ), திருப்பத்தூர் மாவட்டம்.
6. அனைத்து மேல்நிலை பள்ளி தலைமையாசிரியர்கள்
( மாவட்ட கல்வி அலுவலர்கள்/ வட்டார கல்வி அலுவலர்கள் மூலமாக)

இணைப்பு - 1

## மாணவர்களிடம் கேட்டறிந்து தரப்பட வேண்டிய ஆலோசனைகள் விவரம்

1. **நோக்கம்**: 2021-22ஆம் கல்வி ஆண்டில் 12ஆம் வகுப்பு முடித்த மாணவர்கள், அனைவரும் உயர்கல்வி தொடர்ந்துள்ளனரா என்பதனை அறிந்திடவும், அவ்வாறு உயர்கல்வி தொடரா மாணவர்கள் இருப்பின் அதற்கான காரணத்தை கண்டறிந்து, அதனை களைந்து, அவர்கள் உயர்கல்வி தொடர்ந்திட தேவையான வழிகாட்டுதல்கள் வழங்கும் வகையில் உரையாடல் தொடங்கப்பட வேண்டும்.

2. **உங்களை அறியுங்கள்:**
உங்களைப்பற்றி நீங்கள் அறியாமல் இருக்கும் நிலையில், உங்களின் வருங்காலத் திட்டங்கள், குறிக்கோள்கள், எந்த அளவு தகுதி பெற்றுள்ளீர்கள் என்பது பற்றி உங்களுக்கு பிடித்த ஆசிரியர்கள் , வழிகாட்டிகளிடம் கேட்டறிதல் மூலம் உங்களைப்பற்றி அறிவது நல்லது.

3. **பெற்றோரின் முழு ஆதரவு:**
    - ஒரு சிறந்த கல்லூரியில், பிடித்தப் பாடப்பிரிவில் சேர்வது ஒரு கடினமான நடைமுறையாகும். எனவே, இதில் பெற்றோர் அல்லது குடும்பத்தினரின் ஒத்துழைப்பு மிகவும் அவசியம்.
    - எந்த கல்லூரியில் சேர்வது என்பது குறித்த சிபாரிசுகளையும், அதற்கு தேவையான வழிகாட்டுதல்களையும் அவர்களிடமிருந்து பெறலாம்.
    - கல்லூரியில் சேருவதற்கான நிதி நிலை உங்கள் குடும்பத்தினரிடம் இல்லை என்றாலும் வெளியிலிருந்து நிதியைப் பெறும் வசதிகள்,அரசு திட்டங்கள் கல்வி நிதி உதவி என்னென்ன உள்ளன குறித்த தகவல்கள் இணையதளம் மற்றும் பள்ளி ஆசிரியர்களிடம் இருந்து பெற்று பெற்றோர்கள் வழங்கலாம்.. இதில் பெற்றோரின் முழு ஒத்துழைப்பு பெற வேண்டியது அவசியம்.

4. **பள்ளி ஆசிரியர்களுடன் ஆலோசனை:**
    - உங்கள் பள்ளிக்கூடத்திலுள்ள கல்வி ஆலோசகரை அணுகினால் அவரால் கல்லூரியில் சேர்வது குறித்த அனைத்து தகவல்களையும் தர முடியும். கல்லூரிகளில் நடத்தப்படும் நுழைவுத் தேர்வு, கட்டண விவரங்கள், பாடத் தேர்வு ,தேர்வு படிவங்களை பூர்த்தி செய்தல் குறித்த அனைத்து உதவிகளையும் அவரிடமிருந்து பெறலாம்.

- https://naanmudhalvan.tnschools.gov.in என்னும் இணையதளத்தில் கல்வி உதவி தொகை ,அரசுத் திட்டங்கள் ,கல்வி கடன் பற்றிய தகவல்களை அறிந்துக் கொள்ளலாம்.
- மேலும் உங்களுக்கு பிடித்த ஆசிரியர்களிடமிருந்தும் எந்த கல்லூரியை தெரிவு செய்வது என்பது குறித்த ஆலோசனைகளைப் பெறலாம்.
- குறிப்பிட்ட கல்லூரியில் சில பாடப்பிரிவுகளில் சேர பள்ளியின் சிபாரிசு கடிதம் தேவையென்றால் அதையும் மறக்காமல் பெறுவது நல்லது.

5. **முக்கிய விஷயங்களில் கவனம் செலுத்துதல்:**

- கல்லூரியில் சேர்வதற்கு முன் படிக்க விரும்பும் முக்கியப் பாடப்பிரிவுகள், அதில் சேருவதற்கான தகுதி காண் தேர்வு, தரவாரியான கல்லூரிகளின் பட்டியல், எதிர்பார்க்கும் தர நிர்ணயங்கள் போன்ற விஷயங்களில் கவனம் செலுத்துங்கள்.
- குறிப்பிட்ட கல்லூரியில், குறிப்பிட்ட பாடப்பிரிவில் இடம் கிடைக்காத நிலையில், மீண்டும் உரிய தகுதியைப் பெறும் வகையில் திறமையை, மதிப்பெண்களை அதிகரிக்கும் முயற்சிகளில் ஈடுபடவேண்டும் அல்லது உயர்கல்விக்கான மாற்று வழிகளை ஆசிரியர்களிடமிருந்து கேட்டு பெறுதல் வேண்டும்.

- தங்களிடம் சேர விரும்பும் மாணவர்களிடமிருந்து அதற்கான தகுதிகளையும், சுய விபரங்களையும் பல்கலைகழகங்களும், கல்லூரிகளும் எதிர்பார்கின்றன. இதற்கான முன்னேற்பாட்டுடன் இல்லாத போது மாணவர்கள் உங்களின் பள்ளிகளில் உள்ள பயிற்சி பெற்ற ஆசிரியர்களை அணுகி உதவி கோரலாம்

6. **கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்கள் குறித்த ஆய்வு:**

- தாங்கள் விரும்பும் கல்லூரியில் சேர்வதற்கு முன் அனைத்துக் கல்லூரிகள், பல்கலைகழகங்கள், பேராசிரியர்கள் ,வகுப்பறை சூழல் ,கல்விக் கட்டணம் ,விடுதி வசதி குறித்த ஆய்வை செய்வது பல நன்மைகளைத் தரும்.
- முதலில் இதற்காக சில கல்வி நிறுவனங்களையாவது ஆய்வு செய்து அதிலிருந்து நல்ல கல்வி நிறுவனங்களின் பட்டியலைத் தயாரிக்கலாம்.
- அடுத்து, சிறந்த கல்லூரியை தெரிவு செய்து அங்குள்ள சேர்க்கை அலுவலர்களிடம் தனது தகுதியை நிரூபித்து நுழைதல்.

7. பள்ளிகள் / கல்லூரிகள் நடத்தும் கல்விக் கண்காட்சி:

- இணைய தளம் மற்றும் புத்தகங்கள் மூலமாக ஏராளமான கல்லூரிகள் மற்றும் பல்கலைக் கழகங்களின் பட்டியலைப் பார்த்து ஆய்வு செய்து, சிறந்த கல்லூரியை தெரிவு செய்து கல்லூரிகள் நடத்தும் கல்விக் கண்காட்சிக்கு செல்லலாம்.
- இந்த முறையில் நீங்கள் கல்லூரியில் சேர்க்கை அலுவலர்களை நேரில் சந்தித்து தகவல்களை அறிவதன் மூலம் பலன் பெறலாம்.

8. **சரியான நேரத்தில் விண்ணப்பம்:**

- அதிக அளவிலான மாணவர்கள் விண்ணப்பம் அனுப்புவதில் கடைசி நேரத்தில்தான் மும்முரமாக இருக்கிறார்கள்.
- இந்த விஷயத்தில் எவ்வளவு சீக்கிரம் செய்ய முடியுமோ அவ்வளவு நல்லது

9. **விண்ணப்பத்துடன் அடங்கிய மற்ற விபரங்கள்:**

- கல்லூரி மற்றும் பல்கலைகழகங்களுக்கு அனுப்பும் விண்ணப்பத்துடன், சேர்க்கை அலுவலர்கள் எதிபார்க்கும் விபரங்களை மட்டுமே மாணவர்கள் அனுப்ப வேண்டும்.

10. **சமூக ஊடகங்கள் மற்றும் இணையதள பயன்:**

- தற்போது பெரிய கல்வி நிலையங்கள் தங்கள் செயல்பாடுகள் மற்றும் புதிய திட்டங்கள் குறித்து முகநூல், டுவிட்டர் மூலம் அறிவிக்கின்றன. எனவே மாணவர்கள் இவற்றை தொடர்வதன் மூலம் பல விபரங்களைத் தெரிந்து கொள்ளலாம். பல கல்வி நிபுணர்களும் மேற் கண்ட சமூக ஊடகங்களை பயன்படுத்தி வருவதால் அதையும் தொடரலாம்.
- தேவைப்பட்டால் அவர்களின் தனிப்பக்கங்களில் நுழைந்து உங்கள் கருத்தை வெளிப்படுத்தலாம்.
- நல்ல படிப்பை தேர்ந்தெடுத்து, தகுதியான கல்லூரிகளில் சேர இவை பயனுள்ளதாக இருக்கும். நீங்களும், உங்களிடமுள்ள கல்வித்திறன், மற்றும் இதர தனிப்பட்ட திறன்கள் குறித்த விபரங்களை ஊடகங்களில் யூ ட்யூப் மூலம் வெளியிடலாம்.

## இணைப்பு-2

மாணவர்களிடம் எதிர்பார்க்கப்படும் வினாக்கள் (EXPECTED QUESTIONS)

1. எனது பாடப்பிரிவிற்கான உயர்கல்வி பற்றி எப்படி தெரிந்துகொள்வது?
2. எனது மாவட்டத்திற்குள் மற்றும் அருகில் இருக்கும் அரசுகல்லூரிகளை எவ்வாறு அறிவது?
3. கல்லூரிகளில் சேர்க்கைகள் நடக்கும் விவரங்களை எவ்வாறு அறிவது?
4. எனது மாவட்டத்தில் உள்ள நல்ல கல்லூரிகளை எப்படி அறிவது?
5. கல்லூரியில் படிக்கும் போதே Internship கிடைக்குமா ?
6. ஒரு கல்லூரி சிறப்பானது என எதனை வைத்து தீர்மானிக்கலாம்?
    i. கல்லூரிகளின் தர நிலையை எவ்வாறு அறிவது?
    ii. அங்கீகரிக்கப்பட்ட கல்லூரிகளை எவ்வாறு அறிவது?
    iii. Campus Interview வைக்கும் கல்லூரிகளை எவ்வாறு தேர்வு செய்வது?
7. அரசுப் பள்ளியில் 6 முதல் 12ஆம் வகுப்பு வரை படித்துள்ளேன். தொழிற் படிப்புகளில் எனக்கு அரசுப்பள்ளி மாணவர்களுக்கான 7.5 சதவீத இடஒதுக்கீட்டின் கீழ் இடம் கிடைக்குமா?
8. பொறியியல் படிப்புகளில் சில படிப்புகளுக்கு சாண்ட்விச் (எஸ்.டபிள்யூ) என்று போட்டிருக்கிறதே?
9. நர்சிங் டிப்ளமோ படிப்பைப் படிப்பதற்கும் நர்சிங் பட்டப்படிப்பைப் படிப்பதற்கும் என்ன வித்தியாசம்?
10. கேவிபிஒய் கல்வி உதவித்தொகை பெற என்ன தகுதி இருக்க வேண்டும்?
11. இஸ்ரோ நடத்தும் பல்கலைக்கழகத்தில் பிளஸ்டூ படித்த மாணவர்கள் பட்டப்படிப்பில் சேரமுடியுமா?
12. சான்றிதழில் பெயர் மாற்றம் செய்வது எப்படி?
13. அறிவியல் பாடப்பிரிவை எடுத்துப் படிக்கலாமா? அல்லது பொறியியல் படிப்பை எடுத்துப் படிப்பது நல்லதா?
14. பொருளாதார பாடப்பிரிவை எடுத்துப் படிக்கும் மாணவர்களுக்கு என்ன மாதிரியான வேலை வாய்ப்புகள் இருக்கின்றன?
15. 12ஆம் வகுப்பு படித்ததும்ஆடிட்டர்ஆவதற்கான படிப்பில் சேரமுடியுமா?
16. காஸ்ட்அக்கவுண்டிங் படித்தால் வேலை வாய்ப்பு எப்படி?
17. கலை அறிவியல் கல்லூரிகளில் இளநிலைப் பட்டப்படிப்புகளில் சேருவதற்கு நுழைவுத் தேர்வு இருக்கிறதா?
18. கம்ப்யூட்டர் சயின்ஸ் படித்தால் வேலை கிடைக்குமா? இன்பர்மேஷன் டெக்னாலஜி படித்தால் வேலை கிடைக்குமா? எதைப் படிக்கலாம்?
19. மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கு இடஒதுக்கீடு எப்படி இருக்கும்?
20. பிளஸ்டூ படித்த மாணவர்கள் பாலிடெக்னிக் கல்லூரிகளில் சேர முடியுமா?